தொகுதி 6] [பகுதி 10

# பாலர் கல்வி

(தென் இந்திய ஆசிரியர் சங்கத்தின்
மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை)

விஷு—ஹு தைமீ
JANUARY 1942

பிரசுர கர்த்தர்கள் :

தென் இந்திய ஆசிரியர் சங்கம்

520, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 2—0—0
வெளி நாடு
F.M.S.S.S. ஷில்லிங் 4

தனிப் பிரதியின் விலை :
உள் நாடு ரூ. 0—4—0
வெளி நாடு ரூ. 0—6—0

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | தாய் மொழி கற்பித்தல் .... .... .... —M. சுப்பிரமணியம் | 329 |
| 2. | 1—5 வகுப்புகளில் கற்பிக்கக்கூடிய தேகாப்பியாச விளையாட்டுகளைப் பற்றிய விளக்கம் .... .... —T. S. முத்துசாமி | 335 |
| 3. | கலையும் கைத்தொழிலும் VIII .... .... —R. M. Savur | 341 |
| 4. | பிள்ளைகளின் கையெழுத்து I .... .... —R. மஹாதேவன் B.A., L.T. | 343 |
| 5. | ஜூனியர் ரெட்கிராஸ் சங்கத்தின் சுகவிளையாட்டு விதிகளடங்கிய பாடல்கள் .... .... .... —P. ராமசுவாமி | 344 |
| 6. | தையல் வேலை .... .... .... .... —ஸ்ரீமதி ஸீ. காந்தா | 345 |
| 7. | புத்தக விமர்சனம் .... .... ... | 348 |
| 8. | Extracts from Fort St. George Gazette .... | 349 |
| 9. | செய்தித் திரட்டு .... .... .... | 351 |
| 10. | பத்திராதிபர் குறிப்பு ... .. .... | 356 |

## சந்தாதார்களுக்கு அறிக்கை

சந்தாதார்களுக்கு ஞாபகப் படுத்தும் பொருட்டு பாலர் கல்வியின் சந்தா எந்த மாதத்துடன் முடிவடைகிறதோ அந்த மாதப் பத்திரிகையில் அச்சந்தா நம்பர்களைக் பிரசுரிக்கிறோம். சந்தாதார்கள் அதை முக்கியமாகக் கவனித்து சந்தா தொகையைத் தவக்கமில்லாமல் முன்பணமாக அனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். தற்சமயம் அசௌகரியமாயிருந்தால் சந்தா அனுப்பும் தேதியைக் குறித்து உடனே ஒரு கார்டு எழுதியனுப்பவும். தவறினால் வி. பி. அனுப்பி சந்தாவை வசூலிக்க நேரிடும்.

1942 ஜனவரி மாதத்துடன் முடிவடையும் சந்தா நம்பர்கள் :—

சென்னை—M. 31.
வட ஆற்காடு—N. A. 54.
தஞ்சாவூர்—Tan. 3, 41, 87.
திருச்சி—Tri. 7.
ராமனாதபுரம்—Rd. 62.
மதுரை—Md. 41, 42, 44.
திருநெல்வேலி—Tin. 34.
கோயமுத்தூர்—Co. 26, 56.

குறிப்பு :—சந்தா நம்பர்கள் விலாசத்துடன் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆபீஸுக்கு அனுப்பும் ஒவ்வொரு கடிதத்திலும், மணியார்டர் கூபன்களிலும் சந்தா நம்பரைக் கட்டாயம் குறிப்பிடவும். —பத்திராதிபர்.


அசோகா சுகந்த பாக்கு தூள்

தயாரிப்பவர் :

எம். கே கிருஷ்ண செட்டி,
அசோகா பாக்டரி,
கோயமுத்தூர்.

# மாணவர்களின் சுற்றுப் பிரயாணம்

★

யுத்தகால நிர்ப்பந்தங்களின் காரணமாக, இதுவரை மாணவர் கோஷ்டிகளுக்கு அளிக்கப் பட்டு வந்த சில முக்யமான வசதிகளை நிறுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. மாணவர்களுக்கு பிரத்தியேகமான வண்டிகளை ரிஸர்வ்செய்தல், ஸ்பெஷல் டிரெயின்கள் விடுதல், இரட்டிப்பு இடவசதி அளித்தல் ஆகிய வசதிகள் ரத்து செய்யப்பட்டு விட்டன.

ஆயினும், இந்திய ரெயில்வே கான்பரன்ஸ் விதிகளின்படி மாணவர்களுக்கு அளிக்கப்படும் சகாய விகிதங்களும் (பாதிக் கட்டணம்), 12 வய துக்கு மேற்பட்ட மாணவர் கோஷ்டிகளுக்கு, 30 மாணவருக்கு ஒரு உபாத்யாயர் வீதம் இலவச மாகப் பிரயாணம் செய்யும் வசதியும் இன்னும் அமுலில் இருக்கின்றன. இவைகளை மாணவர் கள் பயன்படுத்திக் கொள்ளலாம்.

தென் இந்தியா ரெயில்வே கம்பெனி லிமிடெட்,
(இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது.)

# பாலர் கல்வி


| தொகுதி 6 | 1942 ஷு ஜனவரி மீ<br>விஷு ஷு தை மீ | பகுதி 10 |
|---|---|---|


## தாய்மொழி கற்பித்தல்


**M. Subaramaniam,** *L. M. C. High School, Shiyali.*


### VI. வாசக புத்தகங்கள் (Reading Books)

**கல்வி விருத்திக்கு ஓர் அடிப்படை—வாசகங்கள்**

எழுத்து வாசனையே தெரியாத சிறுகுழந்தைகள், அழகான படங்கள் நிறைந்த ஒரு புத்தகத்தைக் கண்டால் எவ்வளவு விரைவில் அதைப் பார்க்க விரும்புகின்றார்கள்? புதுப் புத்தகத்தைச் சிறுவர்கள் கண்டவுடன் குதூகலத்தோடு அதைத் தொட்டு, மோர்ந்து, கன்னத்தில் அப்பி, பின்பு அதைப் பிரித்துப்பார்த்து, ஆர்வமும் சந்தோஷமும் பெறுகின்றார்கள். இப்புலன் உணர்ச்சியே மன ஊக்கத்திற்கும், சந்தோஷ நிலைக்கும் காரணம். படிக்காத சோம்பேறிப் பிள்ளைகள்கூட புதுப்புத்தகம் கிடைத்ததினம், சற்றுநேரம் உட்கார்ந்து படிக்கின்றார்கள். எனவே நல்ல வாசக பாடபுத்தகங்கள் பிள்ளைகளின் மனதை வசீகரப்படுத்தி, படிக்கவேண்டும் என்கிற ஆவலை உண்டாக்கிவிடுகின்றன. அறிவுக்கு அடிப்படையான அநேக சக்திகளை நல்ல வாசக பாடங்கள் தூண்டிவிடுகின்றன. தவிர, விஷயத்தை ஒரு சிறுவன் வாசக பாடபுத்தகங்களைக்கொண்டு அதை மௌனமாகவோ உரக்கவோ படித்து விரைவில், அவற்றின் சாராம்சங்களைத் தெரிந்துகொள்ளக் கூடும். சொற்களையும், சொற்றொடர்களையும் சரியான சந்தர்ப்பத்தில் உபயோகிக்கவேண்டிய பயிற்சிகளையும் அவை தரக்கூடும். ஆகையால் நல்ல வாசகங்கள் பிள்ளைகளுடைய கல்வி அபிவிருத்திக்கு ஒரு அடிப்படையாக இருக்கின்றன.

### வாசகங்களின் வரம்பு

வாசக புத்தகங்கள் மொழிபயிற்சிக்குத் தக்க ஒரு சிறந்த கருவியாக இருப்பினும், அவை மூலகருவிகளேயொழிய முடிவானவை அல்ல. பரீக்ஷை நோக்கத்தையே அடிப்படையாக கொண்டுள்ள இக்காலத்தில், பாட புத்தகங்களைக் "குருட்டுப் பாடம்" பண்ணி யாதொரு சொந்த வியஷக்கலப்பும் இல்லாமல் பிள்ளைகள் தாங்கள் படித்தவற்றை அப்படியே கக்கிவிடுகின்றார்கள். இதை அப்படியே ஆசிரியர்களும் எதிர்பார்க்கின்றார்கள். சொல்வளத்தைப் பெருக்குவதற்கும், கருத்தை தகுந்த முறையில் அமைத்துக் கூறுவதற்கும் ஒருவாறாக ஏற்பட்ட பாட புத்தகங்கள், நாளடைவில் பிள்ளைகளுடைய மனத்தை பரீக்ஷையினிமித்தம் அடிமையாக்கி விடுகின்றன. வாசகங்களைப் படித்து அதன்பிரகாரம் எல்லா விஷயத்தையும் அறிந்துகொள்வது இயலாதகாரியம். ஏனென்றால் வாசகத்தில் எல்லா விஷயங்களையும் விரிவாக எழுத முடியாது. அப்படி எழுதப்பட்டிருந்தாலும் அதைப் படிக்கவும், மனம் செல்லாது. புத்தகத்தின் பரிமாணமும் அதிகமாகும். தவிர ஒரு வாசகத்தில் இருக்கும் எல்லாப் பாடங்களையும் ஒழுங்காக ஆசிரியர்கள் வகுப்பில் நடத்துகிறதும் இல்லை. ஏதோ சிற்சில பாகங்களையும், குறிக்கப்பட்ட பாடங்களையும் வகுப்பில் ஆசிரியர்கள் கற்பிக்கின்றார்கள். மேலும் வாசகத்தில் எழுதப்பட்டிருக்கும் விஷயங்கள் சிற்சில சமயங்களில் வேற்றுமையுடையனவாகப் பல இல்லாமல், ஒரு குறிப்பிட்ட ஒற்றுமையாகவே இருக்கின்றன. அன்றியும் நாம் தாய்ப்பாஷையின் சகல நுட்பங்களையும், இலக்கணமுதலிய பல அழகுகளையும், சொற்சுவை, பொருட்சுவை ஆகிய இவற்றை வாசகத்திலிருந்து முற்றிலும் தெரிந்துகொள்ள முடியாது. உலக வழக்குகளை எல்லாம் ஒருங்கே சேர்த்துப் பாட புத்தகங்களில் அமைக்கவும் முடியாது. பாட புத்தகங்கள் ஒரு லக்ஷியத்தையும் ஒரு தன்மையையும் விளக்குமே தவிர எல்லாவற்றையும் விளக்கிக் காட்டா. எனவே பிள்ளைகளின் தாய்மொழி வளர்ச்சிக்கு வாசகங்கள் ஒரு கைகாட்டி மரத்தைப்போல் இருக்கின்றனவே தவிர, வழி முற்றிலும் துணை வரும் ஆள்போல இல்லை.

### வாசகங்கள் எவ்வாறு எழுதப்பட்டிருக்க வேண்டும்.

கவர்ச்சியுள்ள பொருள்களே முதன் முதல் பிள்ளைகளின் மனத்தை வசீகரம் செய்கின்றபடியால், வாசகங்கள் பார்வைக்கு நன்றாகவும் விசேஷ வர்ணங்களால் தகுந்த முறையில் வேண்டிய அளவு அழகுபடுத்தியும், உள்ளே அடங்கி இருக்கும், ஓர் அழகான கதையின் பாகத்தையோ, ஒரு மனோகரமான இயற்கைத் தோற்றத்தையோ பட உருவமாக அச்சிட்டு அவற்றைப் பிள்ளைகள் காணும்படி செய்யவேண்டும். பெரிய எழுத்துக்களால் தெளிவாக அச்சிட்டும் பாடத்தை நன்றாக விளக்கிக்காட்டத் தகுந்தபடி படங்களைப் பாடத்தலைப்பிலோ, அடியிலோ

அமைத்தும் பிள்ளைகளுடைய கற்பனைசக்தியையும் உற்சாகத்தையும் தூண்டும்படியான கதைகளை ஒட்டிய பாடங்களை சுருக்கமாகப் புரியும்படியான நடையில் எழுதப்பட்டும், பிள்ளைகள் அப்பாடங்களைப் படிக்கும் சமயங்களில் ஊக்கமும் ஆர்வமும் குன்றுமல் இருக்க அவர்களுடைய அனுபவம், தாய் நாட்டின் பழக்க வழக்கங்கள், அறிமுகமான விஷயங்கள், தெரிந்துகொள்ளும்படியான எளிய வர்ணனைகள் முதலியவற்றை வாசகபாடங்களில் அமைத்து எழுதப்பட்டிருக்க வேண்டும். எனவே, படவிளக்கப்பகுதி, சொல்லழகு, விஷயத்தெளிவு அழகான எளிய நடை, சுத்தமான அச்சுப்பதிப்பு, சுருக்கமான கதைகள், கற்பனை வளர்ச்சிக் கதைகள், உள்ளக்கனலை மூட்டும் ஆர்வமுள்ள தேசீயச் செய்யுட்கள் உணர்ச்சி நிறைந்த செய்யுட்கள், வேடிக்கைக் கதைகள், நகைச்சுவை விஷயங்கள், விநோதக் கூற்றுக்கள், விசேஷப் பிராணி, பறவை, தாவரம் ஆகிய இவற்றை ஒட்டிய விஷயங்கள், முதலியன சேர்க்கப்பட்டு பிள்ளைகளுடைய சக்திக்கும், வயதிற்கும் தக்கவாறு வாசகங்கள் எழுதப்பட வேண்டும்.

### தாய்மொழி வாசகங்களின் தன்மை—ஜெர்மனி.

ஜெர்மனியில் தாய்ப்பாஷையைப் போதிக்கும் தன்மை மிகச் சிறந்ததாகும். இந்நாட்டில் இதற்குத் தகுந்தாற்போல் வாசகங்களும் எழுதப்பட்டுள்ளன. இவ்வாசக பாடங்களை கற்பிக்கும்போது ஆசிரியர்கள் ஓர் சிறந்த நோக்கத்தையே கைக்கொண்டு இருக்கின்றனர். தவிர, சாதாரணமானவர்கள் வாசக புஸ்தகங்களை சிறுவர்களுக்கு எழுதத் துணிவது இல்லை. போதனுமுறையில் நல்ல பயிற்சியும் பிள்ளைகளின் மனுேதத்துவங்களில் ஆழ்ந்த அறிவும், விசேஷ திறமையுடன் புலமையும் உள்ள பேராசிரியர்களே வாசக பாடங்களை ஒழுங்குடன் வகுத்து எழுதுகின்றுர்கள். நாட்டின் விசேஷ லக்ஷணங்களையும், நாட்டினரின் பழக்கம் வழக்கம், பண்பு, முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டு, நாடு பல்வழியிலும் முன்னேற்றம் அடைந்து விளங்கவேண்டும் என்கிற உயர்ந்த நோக்கத்தோடும் பெரும்புலவர்கள் வாசகங்களை எழுதுகின்றுர்கள். இலக்கண முறைப்படி வருந்திக் கற்றுலொழிய தாய்மொழியின் சிறப்பையும் உயர்ந்த தன்மையையும், அதைவெகு நுட்பமாக உபயோகிக்கும் தத்துவத்தையும் ஒரு சிறுவன் அடையான் என்பதே அவர்களில் பலர் கொள்கை. சுலபமாகக் கற்றவை எவையும் சுலபமாகவே மறந்து சுலபமாகவே பயன் அளிக்கும் என்னும் கொள்கை போலும்! மேலும் வாசக பாடங்களை எழுதும் நிபுணர்கள், பற்பல கல்வி சம்பந்தமான பெரிய முறைகளை அப்பாடத்தின் உட்கருத்தாகக் கொண்டே எழுதுகின்றனர். தேவையான சமாசாரங்களையும் மனப்பாடம் பண்ணுவதற்கு அழகான செய்யுட்களையும், சரித்திரம், பூகோளம், இயற்கை சாஸ்திரம் முதலிய பாடங்களிலிருந்து வேண்டிய அளவு எடுக்கப்பட்ட

விஷயங்களையும் இன் சொற்களால் இலக்கணப் பிழையின்றி வாசக பாடங்களில் இப்பெரும் புலவர்கள் சேர்த்து எழுதுகின்றார்கள்.

### தாய்மொழி வாசகங்களின் தன்மை—பிரான்ஸ்.

ஜெர்மன் தேசத்தைப்போலவே பிரான்ஸ் தேசத்திலும், தாய் மொழியைப் போதிப்பதிலும், வாசக புஸ்தகங்களை எழுதுவதிலும் பெரும் புலவர்கள் ஆர்வம் கொண்டுள்ளார்கள். உதாரணமாக மான்ஷியர் பெர்திஞந்து ப்ரூனே என்பவர் தாய்மொழியில் சிறந்த நிபுணர். ஆரம்பப் பள்ளிக்கூடத்து மாணவர்களுக்காக பல வாசகங்களை எழுதியுள்ளார். சிறுவர்களுக்குத் தகுந்தபடி இவ்வாசகங்களைப் போதிக்க, அநேக போதனுமுறை நூற்களையும் இவர் எழுதியுள்ளார். "தாய் மொழியை நம் மாணவர்கள் அதிக சிரத்தையுடனும் ஊக்கத்தோடும் கற்கவேண்டும். இதற்கு முதல் பொறுப்பாளியாக உள்ளது வாசகங்கள். இவ்வாசக பாடங்கள் எல்லாம் பிள்ளைகளின் உற்சாகத்தையும் மன ஊக்கத்தையும், விடாமுயற்சியையும், கொஞ்சம் கொஞ்சமாக பெருக்கவேண்டும். தாய்மொழி அதிக பயன் ஒருவனுக்கு அளிக்க வேண்டுமானல் அவன் அதைப் பிரயாசைப்பட்டுக் கற்கவேண்டும்" என்று அபிப்பிராயப்படுகிறார். இவர் எழுதியுள்ள வாசகங்களில் பல நூதன விஷயங்களைப் பற்றி எளிய நடையில் எழுதப்பட்டு உள்ளன.

### பாலர்டு (B. P. Ballard) வாசக புத்தகங்கள்.

ஜேர்மனி, பிரான்ஸ், சுவேதன் முதலிய நாட்டார்களைப் போல் அவ்வளவு கஷ்டப்பட்டு இங்கிலீஷ் பாஷையை ஆங்கிலேயர்கள் கற்ப தில்லை. என்றாலும் சுலபமான முறையில் கற்பதற்கு வேண்டிய வாசக பாடங்கள் பல எழுதப்பட்டு இருக்கின்றன. உதாரணமாக, பாலர்டு அடிப்படையான இங்கிலீஷ் (**Fundamental English**) என்னும் தலைப் பின் கீழ் சில புத்தகங்களை சிறுவர்களுடைய வயதிற்கும், அவர்கள் அறிந்து கொள்ளும் சக்திக்கும் அவர்களுடைய விருப்பத்திற்கும், தக்க படி இப்புத்தகங்கள் எழுதப் பட்டு உள்ளன. இவைகளில் ஜூனியர், சீனியர் என இரு பிரிவுகள் உண்டு. பொருள் அடக்கம், படங்கள், பயிற்சிக் கேள்விகள், சொல் தொகுப்பு ஆகிய இவைப் படிப்படியாக, இவற்றில் அமைந்துள்ளன. புதிய சொற்களைச் சரியான படி உபயோகிக்கும் மாதிரி, பிள்ளைகளுக்கு அறிமுக மில்லாத சொற்களைப் படங்களின் மூலமாக விளக்கிக் காட்டும் தன்மை, பாட ஒழுங்கு, பிள்ளைகளுடைய மனத்தைக் கவர்ந்து அவர்கள் ஊக்கத்தைத் தூண்டும் படியான அழகான சிறு செய்யுள் தொகுதிகள், இயற்கை வருணனைகள், நகைச் சுவை வாக்கியங்கள், சொற்களை யுக்தியாகப் பொறுக்கி வாக்கியங்களில் பொருத்த அப்பியாசங்கள், விநோத சம்பாஷணைகள், உற்சாகமான சிறு கதைகள், தினசரி சம்பவங்கள், வரலாறுகள், சிறு சரித்திரங்கள், ஒரு

பொருளின் சுய சரித்திரம், ஆகாய விமானம், ரயில் முதலிய நூதன விஷயங்கள், சுலபமான இலக்கணப் பயிற்சிகள், தாய் நாட்டுப் பழக்க வழக்கங்கள், வாழ்க்கையின் விசேஷ சம்பவங்கள், கற்பனைக் கதைகள், பள்ளிக்கூட விசேஷ சம்பவங்கள் மாயாவினோதக் கதைகள், கட்டுக்கதைகள், சரித்திரக்கதைகள், சிறு பழமொழிகள், சாதாரண ஜனங்கள் பாடும் எளிய பாட்டுகள், முதலியனவும் இப்புத்தகங்களில் பாலர்டு அழகாக அமைத்து எழுதியுள்ளார்.

"இலக்கியப்பெரும் பாதைகள்" (**High Roads of Literature**) என்னும் தலைப்பின் கீழ் வகுக்கப்பட்டுள்ள புத்தகங்களும் வெகு விமரிசையாக இருக்கின்றன. எட்வர்ட் ஆர்னல்ட்டு (**Edward Arnold**) என்பவரால் பதிக்கப்பெற்ற பாடபுத்தகங்களும் உயர்ந்த தன்மைவாய்ந்தவையாக இருக்கின்றன.

### பாலர்களுடைய வாசகங்கள் எப்படி இருக்கவேண்டும்?

ஆரம்ப வகுப்பில் வாசக புத்தகங்களை உபயோகிப்பதா, இல்லையா என்பதைப்பற்றி விசேஷ அபிப்பிராய பேதங்கள் இருந்துவருகின்றன. வெறும் கரும்பலகையில் சொற்களை ஆசிரியர்கள் எழுதிப்போட்டு அவற்றைப்பிள்ளைகள் வாசிக்கும்படி செய்வதுதான் உத்தமம் என்று சிலருடைய கருத்து. வாசிக்கும் பழக்கம் படிப்படியாக வருவதற்கும் சுயேச்சையாக ஒன்றைப்படித்து அறிந்து கொள்ளும் திறமை விருத்தியாவதற்கும், அவசியமாக இருப்பது பாடபுஸ்தகமாகையால், அவைகளை முதலிலிருந்தே உபயோகித்துப் பிள்ளைகளின் திறமையை வளர்க்க வேண்டும் என்று சிலர் அபிப்பிராயப்படுகின்றார்கள். இவ்விரு அபிப்பிராயங்களையும் ஒன்று சேர்த்துக் கவனிப்பதே விசேஷம். எனவே, வாசக புத்தகங்களை முதலிலிருந்தே சிறுவர்கள் படித்துப் பழக்கப்படுத்திக்கொள்ள வேண்டும். இப்புத்தகங்கள் பார்வைக்கு அழகாகவும், நல்ல காகிதங்களில் தெளிவாக அச்சிட்டும், அவற்றைப் படிக்கும்போது கண்களுக்குக் கெடுதி நேரிடாவண்ணம் பெரிய எழுத்துக்களை உபயோகப்படுத்தி அச்சிடப்படவேண்டும். பாடங்களின் மத்தியில் படங்களைப் புகுத்தி, பிள்ளைகள் படிப்பதற்கு தடுமாற்றம் உண்டாகும்படி செய்யக்கூடாது. படங்கள் எப்போதும் பாடத்திற்குத் தலைப்புறத்திலோ, அடியிலோ அமைந்திருக்க வேண்டும். வாக்கியங்கள் நீண்டில்லாமல், சிறியனவாகவும், சுலபமாய்ப் படிப்பதற்கு ஏற்றனவாகவும் இருக்க வேண்டும். கடின சொற்களைப்புகுத்தி கஷ்டமான நடையில் இருக்கும் பாடங்கள் பிள்ளைகளுக்கு அருவருப்பை உண்டு பண்ணுமாகையால், சொல்லமைப்பு எளிதில் பிள்ளைகள் புரிந்துகொள்ளுமாறு இருப்பது நல்லது. பாடத்தில் அடங்கி இருக்கும் விஷயங்களும், அவற்றைச் சொல்லும் முறையும், பிள்ளைகளுக்கு விருப்பத்தை உண்டு பண்ணும் தன்மையாக இருப்பதோடு, அவர்களுடைய அனுபவத்திற்கு இசைந்

தாற்போலவும் இருக்கவேண்டும். சில பாடங்களை விசேஷ சித்திர விளக்கத்தால் காட்டி அமைப்பது சிறந்ததாகும். பஞ்சதந்திரம்போன்ற பிராணிக் கதைகள், தெனலிராமன் கதைகள், சரித்திரக் கதைகள், பண்டைத் தமிழ்க் காப்பியங்களில் காணும் கதைகள், புராணக் கதைகள் முதலிய கதை பாகங்களே சிறுவர்களுடைய வாசக புத்தகங்களில் அதிகமாக அமைந்திருக்கவேண்டும். இதர விஷயங்களையும் கதை உருவமாக அமைத்தே சேர்க்கப்படவேண்டும். பிள்ளைகளுடைய கதை விருப்பத்தை அழிக்காமல், ஆர்வப்படுத்த, பயங்கரமானவற்றை நீக்கி, சந்தோஷமானவற்றையே ஒட்டி வாசகங்கள் எழுதப்படவேண்டும். பிள்ளைகளுடைய கற்பனைசக்தி எப்போதும் வளமுள்ளது. இச் சக்தியை கண்டபடி வளர்க்க கதைகளை எழுதாமல், இது நேர்மை அடைந்து விசேஷமாகப் பிற்காலத்தில், ஒன்றை ஆக்கும் தன்மை அடையுமாறு, சாதகமாயுள்ளக் கதைகள் எவையோ அவற்றையே எழுதவேண்டும். சம்பாஷணை, உணர்ச்சியூட்டும் செய்யுட்கள் ஆகிய இவையும் சேர்க்கப்பட்டு இருக்கவேண்டும். எப்போதும் பாடங்கள் சிறியனவாகவும், சுருக்கமாகவும் இருக்கவேண்டும். இதனால் பிள்ளைகள் விரைவில் படிப்பதோடு, அதிகமாகவும் படிப்பார்கள். புதிய சொற்கள் பாடத்தலைப்பில் இருப்பதனால், பிள்ளைகளுக்கு சொல்திட்டம் ஏற்படுவதோடு, இன்னசொல் இன்ன மாதிரி உபயோகப்படுத்த வேண்டும் என்னும் கவனமும் பிறக்கிறது. பொதுவாகப் புத்தகப் பதிப்பு, நடை, விஷயம் விஷயவிளக்கம், பட அமைப்பு முதலியன சிறந்ததாகவும், நன்றாகவும் இருக்கவேண்டும்.

### இடை உயர்வகுப்பு வாசகங்கள்.

இவ்வகுப்பு மாணவர்களுக்கு உரிய வாசக புத்தகங்கள் ஏறக் குறைய கீழ்வகுப்புப் பாலர்களுடைய புத்தகங்களைப் போலவே இருக்க வேண்டும். ஆனால் நடை மாத்திரம் சற்று வித்தியாசப்படலாம். இலக்கியக்கதைகள், சரித்திரக்கதைகள், "நாவல்" முதலிய தொடர்கதைகள் குட்டிக் கதைகள், காப்பிய புராணக் கதைகள், கதைகளை ஒட்டிய செய்யுட்கள், உரை நடைத் திரட்டுகள், கட்டுரை திரட்டுகள், ஒழுக்க விதிகளைக் காட்டும், லக்ஷியக்கதைகள் முதலியன உயர் வகுப்பு மாணவர் வாசகங்களில் இருக்கலாம். குறிப்புரைகளில் விசேஷக் கருத்துக்களையும் இலக்கண நுட்பங்களையும் விளக்கிக் காட்டலாம்.

(தொடரும்)

# 1-5. வகுப்புகளில் கற்பிக்கக்கூடிய தேகாப்பியாச விளையாட்டுகளைப் பற்றிய விளக்கம்.

By Sri, T. S. Muthuswami, *Physical Director,*
*E. R. High School, Trichy.*

(318-ம் பக்கத் தொடர்ச்சி)

## விளையாட்டுகள் (Games)

1. **Tags games** எலிவால் சாட்டை :—பல பையன்கள் வட்டமாக உட்காரவேண்டும். ஒருபையன் ஒரு சாட்டையை எடுத்துக்கொண்டு, உட்கார்ந்திருக்கிற பையன்களை இடது புறமாகச் சுற்றவேண்டும். சுற்றும்போது அச்சாட்டையை யாராவது ஒருபையனுக்குப் பின்னால் போடவேண்டும். பின்னால் சாட்டையுள்ள பையன் அதை யெடுத்துக்கொண்டு தனக்கு வலது பக்கத்திலுள்ளவனை அடிக்கவேண்டும். அடிபட்டவன் எழுந்து வலதுபுறமாக ஓடவேண்டும். இடதுபுறமாக ஓடிய முதல்பையன் காலி ஏற்பட்ட இடத்தில் உட்கார்ந்துவிட வேண்டும். பின்னால் சாட்டை உள்ளவன் கவனிக்காமல் இருந்தால் முதல்பையன் அவனை சாட்டையால் அடித்துத் துரத்துவான்.

2. **Cross Tag** குறுக்கே ஓடு :—பையன்கள் ஒரு குறிப்பிட்ட எல்லையில் நிற்கவேண்டும். அவர்களுள் ஒருபையன் மற்றொரு பையனுடைய பேரைச் சொல்லித் துரத்தவேண்டும். இவர்களின் குறுக்கே எவன் போகிறானோ அவனை முதல்பையன் துரத்தவேண்டும். குறுக்கே ஓடுபவர்களையே பிடிக்கவேண்டும். அடிபட்டவன் பிடிப்பவனாக மாறவேண்டும்.

3. **Shadow tag** நிழலைப்பிடி :—பல பையன்கள் வெய்யில் உள்ள இடத்தில் நாலாபக்கத்திலும் நிற்பார்கள். ஒருவன் வெய்யிலில் உள்ள நிழலைப் பிடிக்கவேண்டும். எவனுடைய நிழல் பிடிபடுகிறதோ அவன் பிடிப்பவனாக மாறவேண்டும்.

4. **Slap Jack** தட்டு ராமுவை :—பையன்கள் வட்டத்தில் நிற்க, ஒருவன் ஓடும்பொழுது ஒருவனைத் தட்டவேண்டும். அவன் ஓடுபவனைப் பிடிக்கவேண்டும். பிடிக்காவிட்டால் அவன் ஓடவேண்டும்.

5. **Sore shot tag** காயத்தைப் பொத்திப்பிடி :—பல பையன்கள் குறிப்பிட்ட எல்லையில் நிற்கவேண்டும். ஒருவன் மற்றொருவனைத் துரத்திப் பிடிக்கவேண்டும். பிடிக்கும்போது, பிடிப்பவன் மற்றவனை எந்த அவயவத்தில் தொட்டு ஓளட் செய்கிறானோ அந்த அவயவத்தை

ஔட் ஆனவன் தன்கையால் பொத்திக்கொண்டே ஓடி வேறு ஒருவனைப் பிடிக்கவேண்டும்.

6. **Nose tag** மூக்கைப்பிடி :—எல்லோரும் வட்டத்தில் நின்று கொண்டு, பிடிப்பவன் வரும்பொழுது கவட்டை வழியாகக் கையை விட்டு மூக்கைப் பிடித்துக்கொண்டு நிற்கவேண்டும். அப்படிச் செய்யாமல் நிற்பவனை ஓடுபவன் தொட்டு ஔட் செய்யப் பார்ப்பான். ஔட் ஆனவன் பிடிப்பவனாக மாறுவான்.

7. **Mount tag** குதிரை சவாரி :—குறிப்பிட்ட எல்லையில் பல பையன்கள் நிற்பார்கள். ஒருவன் பிடிப்பவனாகக் குறிப்பிடப்படுவான். பிடிப்பவன் வருவதற்குள் ஒவ்வொருவன் சவாரி செய்பவனாகவுமாக இருக்கவேண்டும். அவ்வாறு செய்யத் தவறினவன் அடிபடுவான். அடிபட்டவன் பிடிப்பவனாக மாறவேண்டும்.

8. **Back to back tag** முதுகு சேர்த்துக் கோர்த்து நிற்றல் :—இது முன்விளையாட்டைப் போன்றதே. ஆனால் குதிரை சவாரிக்குப் பதிலாக, ஒருவரோடொருவர் முதுகோடு முதுகு சேர்த்து நின்று கைகளால் ஒருவரையொருவர் கோர்த்து நிற்கவேண்டும்.

9. புஷ்பங்களும் காற்றும் :—சமபங்கான மூன்று இடங்கள் எல்லை கட்டப்படும். நடு இடம் பொது இடமாகக் கருதப்படும். மற்ற இரண்டு பக்கத்திலுமுள்ள துண்டு இடங்களில் பல பிள்ளைகள் நிற்பார்கள். ஒரு கக்ஷி புஷ்பங்கள் ஆகும். மற்ற கக்ஷி காற்று ஆகும். புஷ்பக் கக்ஷி ஏதாவது ஒரு பூவின் பெயரை மனதில் நினைத்துக்கொண்டு பொது இடத்தில் வந்து விளையாடும். அப்போது காற்று ஒவ்வொரு புஷ்பத்தின் பெயராக யோசித்துக்கூறும். மனதில் நினைத்த பூவின் பெயர் கூறப்பட்டதும், புஷ்பங்கள் நடு இடத்திலிருந்து தம் இடத்திற்கு ஓடிவிடும். அப்படி ஓடுவதற்குள் பொது இடத்தில் எவன் காற்றினால் அடிபடுகிறானோ அவன் பறிக்கப்பட்ட பூ ஆவான். அவன் தனியாக ஒதுக்கப்படுவான். இப்படியே எல்லாப் பூக்களும் பறிக்கப்பட்டபின் காற்றுக் கக்ஷி புஷ்பக் கக்ஷியாகவும், புஷ்பக்கக்ஷி காற்றுக் கக்ஷியாகவும் மாறும்

10. மணி என்ன ?:—ஒரு நரி வட்டத்தில் இருக்கும். ஆட்டுக்குட்டிகள்வந்து மணி என்ன என்று கேட்கும். நரி தன் இஷ்டம்போல் மணி சொல்லும். 'மணி பன்னிரண்டு' என்று சொன்னதும் நரி பிடிக்க வரும். ஆட்டுக்குட்டிகள் ஓடும். 20 அடிக்கு அப்பால் உள்ள கோட்டைத் தாண்டுவதற்குள் எவர்கள் பிடிபட்டார்களோ அவர்கள் ஔட். கடைசியாகப் பிடிபட்டவன் மறு ஆட்டத்திற்கு நரியாவான்.

11. சாப்பாட்டிற்குப் போ :—ஒரு வட்டத்தில் பையன்கள் நிற்பார்கள். ஒருவன் வட்டத்திற்கு வெளிப்புறமாகவந்து இருவர்மத்தியில் நின்று கையை நீட்டி, 'சாப்பாட்டிற்கு ஓடு' என்பான். இருவரும் எதிர் எதிராக ஓடவேண்டும். காலியிடத்தில் முதல்பையன் நின்று

விடுவான். மற்றொரு காலி இடத்திற்கு எவன் முன்னே வந்துவிடுகிறானோ அவன் நிற்பான். மற்றவன் ஆட்டத்தை ஆரம்பிக்கவேண்டும். ஆட்டத்தை ஆரம்பிப்பவன் கையை மத்தியில் நீட்டும்போது 'ஓடு, தவழ், நொண்டியடி' என்று பலவகையில் எந்தவிதத்தைக் குறிப்பிட்டுச் 'சாப்பாட்டிற்குப் போ' என்று சொல்லுகிறானோ அதேமாதிரி அந்த இருவரும் எதிர் எதிராகச் செல்லவேண்டும்.

12. ஓநாயும் ஆட்டுக்குட்டியும்:—பையன்கள் ஐந்தாறு வரிசைகளாக நிற்கவேண்டும். எச்சரிக்கை செய்ததும் பையன்கள் கைகோர்த்துக்கொண்டு நிற்கவேண்டும். ஓநாய் ஆட்டுக்குட்டியைச் சந்தின் வழியாகவே போய்ப் பிடிக்கவேண்டும். சில சமயங்களில் தலைவன் 'வலது பக்கம் திரும்பு' அல்லது 'இடது பக்கம் திரும்பு' என்று சொல்லுவான். அப்பொழுது சந்துகள் மாறும். எச்சமயத்திலும் குறுக்கே செல்லக்கூடாது.

13. வாலைப் பிடிப்பேன் (Guard your tail):—தலைவனுடைய இடுப்பைக் கோர்த்துக்கொண்டு, பையன்கள் வரிசையாக நிற்கவேண்டும். கடைசிப்பையன் வால் என்று கருதப்படுவான். தலைவனுக்கு எதிரில் ஒரு பையன் நின்றுகொண்டு 'வாலைப் பிடிக்கிறேன்' என்று வருவான். தலைவன் தன் இரண்டுகைகளையும் நீட்டிக்கொண்டு கடைசிப்பையனைப் பிடிபடாமல் காப்பாற்றவேண்டும். பிறகு பிடித்தவன் காப்பாற்றுபவனாக மாறவேண்டும்.

14. சங்கிலித்தொடர்:—குறிப்பிட்டவிடத்தில் ஒருவன் மற்றொருவனைப் பிடிக்கவேண்டும். பிடிபட்டவன் இவனுடன் கையைக்கோர்த்துக் கொள்ளவேண்டும். இவர்கள் இருவரும் சங்கிலி கோர்த்ததுபோலவே ஓடி மற்றவர்களைப் பிடிக்கவேண்டும். பிடிபட்டவர்கள் சேரச் சேர சங்கிலி நீளமாகும். மற்றவர்களைப் பிடிக்கும்போது முனையில் உள்ளவர்களே பிடிக்கலாம். ஆனால் சங்கிலி அறுகக்கூடாது.

15. எண் மாற்று (Number change):—வட்டத்திலுள்ளவர்களை எண்ணச் சொல்லவேண்டும். அவரவர்களின் எண்ணை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். ஒரு பையன் நடுவில் வந்து இரண்டு எண்களைக் கூப்பிடுவான். அவர்கள் இடம் மாறவேண்டும். நடுவிலிருப்பவன் இடத்திலொன்றைப் பிடித்துக்கொள்ளுவான். இடம் அகப்படாதவன் மறு ஆட்டத்தை ஆரம்பிப்பான்.

16. காய்ப்பந்து (Spud ball):—வட்டத்தில் உள்ளவர்கள் எண்ணை ஞாபகம் வைத்துக்கொள்ள வேண்டும். தலைவன் ஏதாவதொரு எண்ணைக் கூப்பிடுவான். அவன் வந்து பந்தை எடுத்து 'நில்' என்று கத்துவான். எல்லோரும் நிற்பார்கள். பந்தையெடுத்தவன் குறிப்பிட்டொருவனை அடிக்கவேண்டும். அடிபட்டவன் அப்பந்தையெடுத்துக் கொண்டு மற்றொருவனை அடிக்கவேண்டும். அடிக்கத் தவறினால் அவன்

பேரில் ஒரு காய் உண்டாகும். மூன்று காய்கள் வாங்கினல் ஒரு குறிப்பிட்ட தண்டனை கிடைக்கும்.

17. **Couple spud** :—இரு கூட்டாளிகளுக்கு ஒரே எண் கொடுப்பது. இப்பொழுது எண்ணைக் கூப்பிட்டால், ஏதாவதொருவன் பந்தை எடுத்துக் கொள்ள வேண்டும். பந்தை இவர்களுக்குள் கடத்திக் கொண்டு ஏதாவதொருவனை அடிக்க வேண்டும். கடத்தும் போது பந்தையெடுத்துக் கொண்டு ஓடக் கூடாது. அடிபட்டவன் பந்தையெடுத்துத் தன் கூட்டாளியுடன் கடத்திக் கொண்டே வேறொருவனை அடிக்க வேண்டும். அடிக்கத் தவறினல் ஒரு காய். மூன்று காய்களுக்கு ஒரு தண்டனை.

18. **Snatch the kerchief** கைக்குட்டையை எடு :—இரு கக்ஷிகளாகப் பிரித்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு கக்ஷியிலுள்ளவருக்கும் எண் கொடுக்க வேண்டும். நடுவில் ஒரு கைக்குட்டை வைக்கப்படும். ஒரு எண்ணைக் கூப்பிட்டவுடன், அதே எண்ணையுடைய இரு கக்ஷியிலுள்ளவர்களும் ஓடி வருவார்கள். அவர்கள் மற்றவர்களிடத்தில் பிடி படாமல் தம்முடைய கக்ஷிக்கு அதைக் கொண்டு போக வேண்டும். அப்படிக் கொண்டு வந்தால் அக்கக்ஷிக்கு ஒரு பழம். கைக்குட்டையைக் கொண்டு போகும் பொழுது மற்றக் கக்ஷியினர் அவர்களைப் பிடித்துவிட்டால் பிடித்த கக்ஷிக்குப் பழம். யார் அதிகப் பழங்கள் வாங்குகிறார்களோ அவர்களின் கக்ஷிக்கு ஜெயம்.

குறிப்பு :—இதற்கு முன் உபாத்தியாயர் நடுவில் நின்று கொண்டு எண்களைக் கூப்பிட்டுத் தன்னைத் தொடச் சொல்லலாம்.

19. **Catch the wand** :—கோலைப்பிடி. வட்டமாக நிற்கவேண்டும். ஒவ்வொருவனுக்கும் எண்கள் கொடுக்கவேண்டும். நடுவில் ஒருவன் ஒரு கழியைப் பூமியில் ஊன்றி கையில் பிடித்து நிற்கவேண்டும். ஒரு எண்ணைக் கூப்பிட்டுவிட்டுத் தடியை விட்டுவிட்டு ஓடுவான். தடி கீழே விழுவதற்குள் அந்த எண்காரன் யாரையாவது பிடிக்கவேண்டும். பிடிக்காவிட்டால் ஒரு காய். இப்படி மூன்று காய்கள் வாங்கினல் ஒரு தண்டனை.

20. **Foreman circle chase** முன் ஓடுபவனைப் பிடி :—வட்டத்திலுள்ளவர்களை நவ்வாலுபேராக எண்ணவேண்டும். தலைவன் ஒரு எண்ணைக் கூப்பிடுவான். அவ்வெண் உடையவர்கள் வட்டத்தின் வெளியே ஓடுவார்கள். அவனவன் தன்முன்னே ஓடுபவனைப் பிடிக்க முயற்சிசெய்ய வேண்டும். பிடிபட்டவர்கள் ஆட்டத்தை விட்டு வெளியே போகவேண்டும். மற்றவர்கள் விளையாடவேண்டும்.

21. **Three deep** :—பையன்கள் உள்ளும் புறமுமாக இருவட்டங்களாய் நிற்கவேண்டும். வட்டத்திலுள்ளவர்கள் ஒருவன்பின் ஒருவனக நிற்கவேண்டும். இருவர்கள் வெளியே ஓடிவந்து ஒருவனை விரட்ட வேண்டும். மற்றவர்கள் தப்பிக்க ஓடவேண்டும். அவன் இருவர்களுக்கு முன் நின்றுவிட்டால் தப்பித்தவனகக் கருதப்படுவான். மூன்றாவது ஆள், அதாவது வெளிவட்டத்தில் உள்ளவன், அகப்பட்டுவிட்டால் பிடிப்பவன் ஓடுபவனக மாறவேண்டும்.

குறிப்பு :—தொடர்ந்து ஓடாமல் அடிக்கடி முன்னின்றால் பார்ப்ப தற்குச் சுவாரஸ்யமாகவிருக்கும்.

22. **Mount ball (older boys)** குதிரை சவாரி :—பையன்களை இரு கக்ஷிகளாகப் பிரிக்கவும். ஒரு கக்ஷி குதிரைகள். குதிரைகள் வட்ட மாக நிற்கவேண்டும். ஒரு கக்ஷி சவாரி செய்பவர்கள். குதிரைகளின் மேலே உட்கார்ந்துகொண்டு பந்தை அவரவர்களுக்குள் 'கடத்திக் கொள்ளவேண்டும். பந்தைப் பிடிக்கும்போது குதிரைகள் ஆடியும் அசைந்தும், சவாரி செய்பவர்களைப் பந்து பிடிக்கமுடியாமல் செய்ய வேண்டும். கீழே பந்து விழுந்ததும் குதிரைகள் எடுத்துத் தங்களுக்குள் கடத்திச் சவாரி செய்பவர்களையடிக்கவேண்டும். அடிவிழுந்துவிட்டால் குதிரைகளாய் இருந்தவர்கள் சவாரி செய்பவர்களாகவும், சவாரி செய் பவர்கள் குதிரைகளாகவும் மாறவேண்டும்.

23. எத்தனை விரல்கள் ?:—இதுவும் மேற்கண்ட விளையாட்டைப் போன்றதேயாகும். ஆனால் பந்து கிடையாது. சவாரி செய்பவர்களின் தலைவன் தன் ஒரு கையால் குதிரையின் கண்ணைப் பொத்திக்கொண்டு, மற்றொரு கையையுயர்த்திச் சில விரல்களைக் காட்டி 'எத்தனை விரல்கள்' என்று கேட்பான். சரியாகச் சொல்லிவிட்டால் குதிரைகள் சவாரி செய்பவர்களாக மாறும். சொல்லாவிட்டால் மறுதடவையும் குதிரைக ளாகவே இருக்கவேண்டும்.

24. ஈக்களும் எட்டுக்கால் பூச்சியும் :—ஒரு வட்டத்தினுள் எட் டுக்கால் பூச்சி உட்கார்ந்திருக்கும் 20 அடிக்கு அப்பால் இரண்டு பக்கங் களிலும் கோடுகள் போடவேண்டும். ஈக்கள் எட்டுக்கால் பூச்சியைத் தொந்திரவு செய்யும். திடீரென்று எட்டுக்கால் பூச்சி அந்த ஈக்களைப்பிடிக் கவேண்டும். பிடிபட்டவர்களும் எட்டுக்கால் பூச்சிகளாக மாறுவார்கள்.

25. **Flying Dutchman** :—வட்டத்தில் இருவரைத் தவிர மற்றவர்கள் கை கோர்த்துக்கொண்டு நிற்பார்கள். வட்டத்திலுள்ள இவர்களின் கை நடுவில், வெளியில் நிற்பவர்களில் ஒருவன் தட்டிவிட எல்லாரும் ஓடுவார்கள். தட்டப்பட்ட இருவர்களும் கையைக் கோர்த் துக்கொண்டு வெளியிலிருப்பவர்களைத் துரத்தி ஓடுவார்கள். கையை விடாமல் எதிர்க் கட்சியில் யாரையாவது தொட்டுவிட்டால், அவர்கள் மறுபடி ஆரம்பிக்கவேண்டும். இல்லாவிடில் இவர்களே ஆரம்பிக்க வேண்டும்.

26. கூட்டாளியைக் கண்டுபிடி :—சிறுவர்களை இருகக்ஷிகளா கப் பிரிக்கவும்; ஒரு கக்ஷியை உள் வட்டத்திலும், மற்றொரு கக்ஷியை வெளி வட்டத்திலுமாக நிற்கச் சொல்லவும். இப்பொழுது நேர்நேராக நிற்பவர்கள் கூட்டாளிகள். உள் வட்டத்தில் உள்ளவர்களை வலது பக்க மாகவும், வெளிவட்டத்தில் இருப்பவர்களை இடது பக்கமாகவும் திரும் பச்சொல்லவும். இப்பொழுது அதே வட்டத்தில் போகச்சொல்லவும். தலைவன் ஊது கேட்டதும் தனது கூட்டாளியைப் பிடித்துக்கொண்டு

உட்காரச் சொல்லவும். யார் கடைசியில் உட்காருகிறார்களோ அவர்களுக்கு ஒரு காய். இப்படி மூன்று காய்கள் வாங்குபவர்கள் தண்டனையடைவார்கள்.

27. **Prisoner's base** :—புதையலெடுத்தல் இருகக்ஷிகளாகப் பிரிக்கவேண்டும். சுமார் 80 அடி நீளமும், 40 அடி அகலமுமுள்ள இடத்தை இரண்டாகப் பிரிக்கவேண்டும். ஒவ்வொரு பாதியும் ஒவ்வொரு கக்ஷியினுடைய ராஜ்யம். ஒவ்வொரு ராஜ்யத்திற்கும் பின்பக்கத்தில் சில கற்களைப் புதையல் என்ற பெயருடன் வைக்கவேண்டும். கக்ஷியின் நோக்கம் என்னவென்றால், எதிரி கையில் அகப்படாமல் அவர்களின் ராஜ்யத்தினுள் புகுந்து புதையலை எடுக்கவேண்டும். எதிரி கையில் அகப்பட்டு விட்டால், அகப்பட்டவனை எதிரிகள் சிறையில் அடைப்பார்கள், ஒரு பையன் மற்றக் கக்ஷியினுள் எவர் கையிலும் அகப்படாமல் போனால் அவன் திரும்பும்பொழுது ஒரு கைதியையோ அல்லது புதையலையோ எடுத்து வரலாம். கைதியிருந்தால் புதையலை யெடுக்கக்கூடாது. குறிப்பிட்ட நேரத்திற்குப் பிறகு எந்தக் கக்ஷியினிடம் அதிகப் புதையல் இருக்கிறதோ அந்தக் கக்ஷிக்கு ஜெயம்.

28. **Black and white** :—குறிப்பிட்ட எல்லையை இரு பங்காகப் பிரிக்க வேண்டும். ஒரு கட்டையில் சில பாகங்கள் வெள்ளை பூசியும், சில பாகங்கள் கறுப்புப் பூசியும் இருக்க வேண்டும். ஒரு கக்ஷி வெள்ளை. மற்றொரு கக்ஷி கறுப்பு. கட்டையைத் தூக்கிப் போட்டால் எந்தக் கக்ஷி அடியில் விழுந்ததோ அந்தக் கக்ஷி மற்றக் கக்ஷியைத் துரத்திப் பிடிக்க வேண்டும். ஓடுகிறவர்கள் தங்கள் எல்லைக் கோட்டைத் தாண்டிச் சென்று விட்டால், அவர்களைப் பிடிக்கக் கூடாது. பிடி பட்டவர்கள் அடுத்த கக்ஷியைச் சேருவார்கள். கடைசியில் எந்தக் கக்ஷியில் அதிகப் பேர் இருக்கிறார்களோ, அந்தக் கக்ஷிக்கு ஜெயம்.

குறிப்பு :—இதையே **காடை, காகம்**, என்று பெயர் வைத்துக் கொண்டும் விளையாடலாம்.


29. **இங்கே வா** :—ஒரு பையன் நடுவில் நின்று கொண்டு மற்றப் பையன்களை இங்கே வா என்று கூப்பிடுவான். மற்றவர்கள் ஓடிவந்து எதிர்ப் பக்கத்தைச் சேருவார்கள். ஓடி வருகிறவர்களில் எவ்வளவு பேர்களைப் பிடிக்க முடியுமோ அவ்வளவு பேர்களையும் நடுவில் உள்ளவன் பிடிப்பான். பிடிபட்டவர்கள் மற்றவர்களைப் பிடிப்பதில் நடுவில் நிற்பவனுக்கு உதவி செய்ய வேண்டும்.

30. **கிள்ளு விளையாட்டு** :— வரிசையிலிருக்கும் பையன்கள் இடது பக்கத்திலிருந்து கிள்ள ஆரம்பிப்பார்கள். ஒவ்வொருவனும் முறையே அடுத்தவனைக் கிள்ளுவான். கடைசிப் பையன் 'ஓ' என்று கத்துவான். மற்றவர்கள் ஓடுவார்கள். ஓடும் பையன்களை நடுவிலிருப்பவன் பிடிப்பான். பிடிபட்டவர்கள் பிடித்தவர்களுக்கு உதவி செய்யவேண்டும். கடைசியில் அகப்பட்டவன் அடுத்த விளையாட்டையாரம்பிப்பான்.

# கலையும் கைத்தொழிலும் VIII

R. M. Savur, *Divisional Inspector of Schools, Coimbatore.*

வரைகருவி (**Creaser**)யின் உபயோகத்தால் அநேகவித உருவங்களை வரையலாம். ஆனால் தோலில் மிகவும் மெல்லிய கோடுகள் போட முடியாது. கீழே காட்டியுள்ள படத்தை கவனித்தால் என்னென்ன உருவங்கள் அமைக்கலாமென்பதும் எவை அமைக்கமுடியாதென்பதும் விளங்கும்.



படத்தில் காட்டப்பட்டுள்ள முகத்தின் நுட்பமான சாயைகளைக் காண்பிக்கவேண்டுமானால் அவ்வுருவத்தை சுமார் மூன்று பங்காவது பெரியதாக்கவேண்டும். சிறிய அளவிலுள்ள உருவங்களில் முக்கியமான பாகங்களைமாத்திரம்தான் காண்பிக்கமுடியும்.

சித்திரம் வரையும் சக்தியை உடையவர்கள் தங்களுக்கு இஷ்டமான உருவங்களை அமைக்கக் கூடும். இச்சக்தி இல்லாதவர்கள் என்ன செய்வது? அவர்களுக்கும் கலைக்கும் சம்பந்தம் இல்லையா என்னும் கேள்வி உண்டாகலாம். இதைப்பற்றி ஆர்தர் லிஸ்மர் (**Mr. Arthur Lismer**) என்னும் பெரியார் என்ன சொல்லுகிறாரென்று கவனிப்போம். "கலையின்மூலம் கல்வி" என்னும் விஷயத்தைப்பற்றி அவர் பேசுங்கால் "கலை என்பதை நாம் சிலருக்கே இருக்கக்கூடிய தனி சக்திகளில் ஒன்றாகக் கருதுவோமானால், ஒவ்வொருவரின் மனதையும் வளரச் செய்யும் கலைச் சக்தியை நாம் குறைத்தவர்களாவோம்" கலைச்சக்தி என்பது ஒவ்வொருவரிடமும் உள்ளது. ஆனால் இப்பொழுதுள்ள கல்வி முறை கலைச் சக்தியை மழுங்கச் செய்கிறது. ஆதலால் நாம் நம்மைச் சுற்றியுள்ள கலைகளிலுள்ள செல்வத்தை அறியாத ஜட மனிதர்களாகக் காலங் கழிக்கிறோம்."

கலை கற்பிப்பதின் நோக்கம் சிறந்த விஷயங்களை ஆராய்ந்து அறியும் சக்தியை வளர்ப்பதாக இருக்கவேண்டும். கைத்தொழிலின் நோக்கம் கற்பனைசக்தியை விருத்தி செய்வதாயிருக்கவேண்டும்.

சித்திரம் வரையும் சக்தியில்லாதவர்கள்கூட அவர்கள் செய்யும் கருவிகளை அழகுபடுத்தலாம். இதற்கு உதவும் கருவிக்கு அழகுபடுத்தும் அச்சுகள் (**Ornamental punches**) என்று பெயர். இந்த அச்சுகள் இரும்புச் சட்டங்களின் நுனியில் காணப்படும். ஒவ்வொரு சட்டத்தின் நுனியிலும் ஒவ்வொருவித உருவத்தின் அச்சு இருக்கும். இந்த அச்சுக்களின் உதவியால் வேலைசெய்வோரின் கற்பனை சக்திக்குத் தகுந்தவாறு உருவங்களின் வரிசையை மாற்றி அழகான ரூபங்கள் அமைக்கலாம். அச்சுக்களை தோலின்மேல் வைத்து மெதுவாக சுத்தியினால் தட்டினால் அச்சின் உருவம் தோலின்மேல் விழும்.

மேலே காட்டியுள்ள படத்தைக் கவனித்தால் அழகுபடுத்தும் அச்சுக்களின் வகைகளை அறியலாம். இவைகளை அரத்தின் உதவியால் நாமே செய்துகொள்ளலாம். வளைவு கோடுகள் உள்ள அச்சுக்கள் செய்வதற்கு ரசாயன அச்சுமுறை (**Etching**) அவசியமானது. சோதனை சாலை (**Laboratory**) உள்ள பள்ளிக்கூடங்களில் இம்முறையையும் கையாளலாம். இப்படிச் செய்வது பிள்ளைகள் ரசாயன சாஸ்திரம் கற்றுக் கொள்ளுவதற்குத் தகுந்த தூண்டுகோலாகும்.

வட்டமான அச்சுக்கள் தயாரிக்க பழய பெண்சாவிகளைக்கூட உபயோகிக்கலாம்.

# பிள்ளைகளின் கையெழுத்து—

R. மகாதேவன் B. A., L. T.

"தலையெழுத்து எப்படி இருந்தபோதிலும் கையெழுத்து நன்றாக இருக்க வேண்டும்" என்பது ஒரு பழமொழி. நாம் தலையெழுத்தை மாற்ற, அதாவது திருத்த முடியுமா? மேல் வகுப்பு மாணவர்களின் கையெழுத்தைத்திருத்த எவ்வளவு முயன்றும் பயன் படாமையைக் கண்டு கையெழுத்தையும் மாற்ற முடியாதென்றுதான் வருத்தத்துடன் தெரிவிக்கவேண்டியிருக்கிறது. எவ்வளவு வயதுக்குமேல் மாற்ற முடியாதென்பதை கல்வி நிபுணரான தாரன்டைக் (Thorndyke) என்பவர் பல சோதனைகள் செய்து கண்டுபிடித்திருக்கிறார். "பதினொரு வயதுக்கு மேல் சாதாரணப் பிள்ளைகளின் கையெழுத்தில் ஒருவித சீர்திருத்தத்தையும் எதிர்பார்க்கமுடியாது" என்று அவர் நிரூபித்திருக்கிறார். ஆசிரியர்களுடைய அனுபவமும் இதுதான்.

ஆதலால் நாம் கவனிக்க வேண்டியதென்ன? பிள்ளைகளின் கையெழுத்தை மாற்ற முடியாமற்போனாலும், இளம் பிராயத்தில் அவர்கள் எழுதக் கற்றுக்கொள்ளும்போதே சுலபமாக எழுத்துக்கள் சுத்தமாகவும், முடிந்தால் அழகாகவும் எழுதும்படி செய்யலாம். "முதற் கோணல் முற்றும் கோணல்" என்னும் பழமொழிக்கு நிதர்சனமாக உள்ள உதாரணம் நமது பிள்ளைகளின் கையெழுத்தே.

## எழுத்துக்கு முன் சித்திரம் :—

பிள்ளைகள் 5 அல்லது 6 வயதில் எழுதக் கற்றுக் கொள்ளுகிறார்கள். ஒவ்வொரு எழுத்தும் பல கோடுகளாலானவை. ஆதலால் ஒன்று அல்லது இரண்டு கோடுகள் வரையப் பழக்கமாவதற்கு முன், பல கோடுகளுள்ள எழுத்துக்களைக் கற்றுக் கொடுப்பது தவறு அல்லவா? இத் தவறை உணர்ந்தே தற்காலத்திலுள்ள 'பால சிட்சை'ப் புத்தகங்களில் முதலில் வரும் எழுத்துக்கள் 'ப', 'ட', 'ம்' முதலியவை.

ஆனால் 'ப' என்ற எழுத்துக்கு ஒரு வித அர்த்தமும் இல்லை. ஆதலால் குழந்தைகள் 'ப' என்ற எழுத்தை எழுதி முடித்தவுடன் அவர்களுக்கு "நாம் ஒரு விஷயத்தைக் கற்றுக் கொண்டு விட்டோம்" என்ற உற்சாகம் உண்டாவதில்லை. உற்சாகம் சிறிது உண்டானாலும் அதே மூன்று கோடுகளை உபயோகித்து "பிள்ளைகளே நாம் இப்பொழுது டம்ளர் போடக் கற்றுக் கொள்வோம்" என்று சொல்லிப் பாருங்கள். பிள்ளைகள் டம்ளர் போட்டு முடித்தவுடன் அவர்கள் முகங்களைப் பாருங்கள். அப்பொழுது தான் எழுத்துக்கு முன் சித்திரம் வரையக் கற்றுக் கொடுப்பதின் அவசியம் விளங்கும்.

இவ்விஷயத்தைப்பற்றி மகாத்மா காந்தியும் எழுதியிருக்கிறார். அவருடைய அபிப்பிராயமும் கையெழுத்துக்குமுன் சித்திரம் வரைதல் தான் கற்றுக்கொடுக்கவேண்டுமென்பதே. காந்தி "எந்தப் பள்ளிக்கூடத்தில் 'ட்ரெயினிங்' ஆனார்" என்று சிலர் கேட்கலாம். நம்மில் ஒவ்வொருவரும் ஒரு வகுப்புக்கே ஆசிரியராக இருக்கிறோம். மகாத்மாவோ இந்திய மக்களுக்கெல்லாம், இந்தியர்களுக்குமாத்திரமல்லாமல் உலகத்தோருக்கே ஒரு ஆசிரியராக விளங்குகிறார். காந்தி கற்பித்த விஷயங்களில் மேற் கூறியதும் ஒன்று, முக்கியமாக முதல் வகுப்பு ஆசிரியர்கள் கவனிக்க வேண்டியதென்பதை நேயர்கள் உணர்வார்களாக. (தொடரும்)

# ஜூனியர் ரெட்கிராஸ் சங்கத்தின் சுகவிளையாட்டு விதிகளடங்கிய பாடல்கள்

P. Ramaswamy

"ஓடி விளையாடு பாப்பா" என்ற பாரதியார் பாடலின் சந்தம்.

1. கூடுவாய் நலம்பெறவே தம்பீ—ரெட்கிராஸ்
குழுவின் பெருமை தனை நம்பி
பாடுவாய் சுக விதிகள் ஓங்கத்—தம்பி
பாழ் படுத்தும் வியாதி நம்மை நீங்க.

2. நாள் தவறாமலே நீ குளிப்பாய்—தம்பி
நல்ல துணியாலுடல் துடைப்பாய்.
கையின் நகங்கள் சுத்தம் செய்வாய்—தம்பி
கனிவுடன் நல்லுணவே கொள்வாய்.

3. சாப்பிடுவதற்கு முன்னும் பின்னும்—தம்பி
சரியாகக் கொப்பளிவாய் என்றும்
சுத்த வெளியிடத்தில் ஓடி—தம்பி
நித்தம் விளையாடிடுவாய் நாடி.

4. நாசிவழி மூச்சிழுக்கும் பழக்கம்—தம்பி
நல்ல தெனக் கொண்டிடுவாய் முழக்கம்.
காய்கனி உணவருந்தல் நன்றே—தம்பி
களிப்பாய் உணவுதனை மென்றே.

5. உணவில் உயர்ந்த பாலைப் பருகு—தம்பி
இரவில் விழித்திராதே யுறங்கு.
முக மூடித் தூங்காதே கெடுதி—தம்பி
மூடாதே ஜன்னல் தூங்கும் விடுதி.

6. உணவுடன் நீரருந்த வேண்டாம்—தம்பி
உண்ணு முன் ஓர் மணிக்கு வேண்டு
குணம் பெற உண்ட மணி யொன்று—தம்பி
கடந்தபின் நீர் குடித்தல் நன்று.

7. கண்ட விடத்தில் உமிழாதே—தம்பி
கணக்கில் வியாதிதரும் ஈதே.
நன்றல்ல இருமுகின்ற பழக்கம்—தம்பி
நாடிடேல் தும்முகின்ற ரிணக்கம்.

8. ஐந்து வருடங்களுக் கொருக்கால்—தம்பி
அம்மைக் குத்திக் கொள்ளல் நலம் விருப்பால்
மாந்தரை வருத்தும் வசூரி நோய்வாய்—தம்பி
மடிவரேல் அம்மை குத்திக் கொள்வாய்.

# தையல் வேலை

ஸ்ரீமதி ஸீ. காந்தா.

சிறு குழந்தைகளுக்கு தையல் கற்றுக்கொடுப்பது சுலபமான காரியம் என்று சிலர் கருதுவதுண்டு. ஆனால் அவ்வேலையை கைக் கொண்டு அவர்களுக்கு கற்றுக்கொடுக்கும்போதுதான் அதன் கஷ்டம் தெரியவரும்.

குழந்தைகளின் சிறு கைகள் ஊசியை பற்றுவதற்கு சரிவர அமைந்திருக்காது. ஆதலால் ஊசியைப் பிறரிடத்திலிருந்து வாங்குவதற்கும் அவர்களிடத்தில் திருப்பி கொடுப்பதற்கும் அப்பியாசம் செய்ய வேண்டும். பின்பு ஊசியைப் பிடிக்கவும் அதில் நூற்கோர்க்கவும் கற்பிக்க வேண்டும். ஒரே வகுப்பில் 6, 7, 8, 9, 10 வயதுள்ள குழந்தைகள் இருக்கக்கூடும். அவர்களில் சிலருக்கு தைக்கத் தெரிந்திருக்கலாம். ஆகையால் அவரவர்களுக்கு ஏற்றவாறான தையல்வேலை கற்றுக் கொடுக்கவேண்டும்.

குழந்தைகளுக்கு தையல் கற்றுக்கொடுப்பதின் முக்கிய நோக்கம் யாதெனில்:—

1. அதிகமாக வளர்ந்திராத விரல் தசைகளை, ஊசியைப்பிடித்து தைப்பதினால், உறுதிபடுத்தவும்;

2. கண் பார்த்து கை வேலை செய்வதால் கண் கூர்மையாக்கவும்;


3. பாலர்களின் மனோபாவனையை அபிவிர்த்தி செய்யவும்;

4. குழந்தைகளுக்கு ஆசையும் உற்சாகமும் உண்டாக்கவுமாகும்.


இந்த நோக்கங்களைக்கொண்டு, சிறு குழந்தைகளுக்கு எவ்விதமான தையல் கற்றுக்கொடுப்பது என்பதை இனி கவனிப்போம்.

கடைகளில் விற்கும் (Canvas card) வலை அட்டையையும் அதற்கு ஏற்றதான காது பெரிதான தடி ஊசியையும் வாங்கி உபயோகிக்கவேண்டும். வர்ண நூல்களே ஏதுவானதாகும்.


ஆறு வயதுள்ள குழந்தைகள் :—1-ம் படத்தில் காண்பித்ததுபோல், 9 அங்குலம் நீளம் 6 அங்குலம் அகலம் உள்ள வலை அட்டையைக்கொடுத்து ஊசியில் நூல் கோர்த்து, அடியில் முடி போட்டு அடிப் பக்கமாக முதற் துவாரத்தில் ஊசியைவிட்டு மேல் பக்கமாக இழு. பிறகு அதற்குநேராக இருக்கும் துவாரத்தின் வழியாக விட்டு இழுக்கவேண்டும். இது மாதிரியாக 2-ம் படத்தில் காட்டியபடி நேர்கோடுகளாக முதலில் தை. பின்னர் குறுக்கு கோடுகளாகவும் தைக்கலாம். இதில் பக்கத்திலிருக்கும் துவாரத்தில் ஊசியை விட்டு தைக்கவேண்டும். இதை 3-ம் படத்திலிருந்து அறிந்துக்கொள்ளலாம்.



படம் 1




படம் 2




படம் 3

இதற்கு பின்னர் சாய்வு கோடுகளாகவும் தைக்கலாம். அதற்கு ஆங்கிலத்தில் **Cross stitch** எனப்படும். இது முதலில் கொஞ்சம் கஷ்டமாகயிருந்தபோதிலும் பின்னர் சுலபமாகக் காணப்படும்.




படம் 4

4-ம் படத்தில் காண்பித்ததுபோல் முதலில், ஊசியில் **Wool** நூலை கோர்த்து, முதற் துவாரத்தின் வழியாக நூலை விட்டு, இரண்டாவது வரியில் இரண்டாம் துவாரத்திற்குள் விட்டு இழுத்தால், சாய்வு கோடு வரும். இவ்விதமாக சாய்வுகோடுகள் நாலைந்து தைத்த பிறகு, அதையே பெருக்கல் குறி × மாதிரியாக தைக்கலாம். பெருக்கல் குறி தைப்பதற்கு மேற்கூறியபடி சாய்வுகோடுகள் இடது பக்கமாகவே தைத்த பிறகு, அக் கோடுகளின் மீது வலதுபக்கமாகவே சாய்வு கோடுகள் தைக்க வேண்டும். இதை 5-ம் படத்திலிருந்து அறிந்துகொள்ளலாம்.




படம் 5

இதேமாதிரியான சாதாரண கோடுகள் தைத்தபிறகு, அவர்களுக்கு இக் கோடுகளைக் கொண்டே **(Patterns)** பலவிதமான ரகங்கள் தைக்க கற்றுக்கொடுக்கலாம். 6-ம் படத்தில் காண்பித்திருப்பதுபோல் மூன்று நேர்கோடுகளும், மூன்று குறுக்கு கோடுகளும் தைக்கலாம். பெருக்கல் குறி மாதிரியும் வரிசையாக தைக்




படம் 6

கலாம். இவைகளெல்லாம் வலை அட்டை (**Canvas**)யில் தைத்துத் தேர்ச்சி பெற்ற பிறகு கெட்டியாகயிருக்கும் வலை துணியை வாங்கி அதில் பல தினுசுகளாக தைக்கவும் கற்றுக்கொடுக்கலாம்.




படம் 7

இது ஏழு அல்லது எட்டு வயதுள்ள குழந்தைகள் செய்யலாம். இத் துணியில் வங்கி தினுசு (**Patterns**) நன்றாக இருக்கும். இவ்விதமான துணிக்கு துவாரம் சிறிதாகவும் நெருங்கியும் இருக்கும் ஆகையால் கோடுகள் நெருக்கமாகவும் அழகாகவும் அமையும்.



படம் 8

9-ம் படத்தில் காண்பித்திருப்பதைப் போல் மூன்று துவாரங்கள் அடங்கிய ஓர் நேர் கோடு தைத்து, பக்கத்து கோட்டுக்கு மேல் இருந்து ஒரு துவாரம் குறைத்து அடியில் ஒரு துவாரம் அதிகமாக எடுத்துக் கொண்டு தைக்க வேண்டும். இவ்விதமாக ஏழு கோடுகள் மேலிருந்து குறைந்து, அடியில் அதிகமாக கோடுகள் எடுத்துக் கொண்டு தை. இதை தைத்த பிறகு, அடியில் ஒரு துவாரம் குறைத்து, மேல் ஒன்று அதிகமாக எடுத்துக்கொண்டு, ஆறு கோடுகள் தை. அதேவிதமாக அவ்வரியை முடித்து, இரண்டாவது வரிக்கு வேறு வர்ண நூலை உபயோகிக்கலாம். இவ்விதமாக நான்கு வர்ண நூல்கள் ஒன்றன் பின் ஒன்றாக கிரமப்படி உபயோகித்து, தைத்து அப்பையை முடித்து, உட்பக்கம் சலவை செய்யாத மல் (**unbleached mull**) கொடுத்து, பையாக முடிக்கலாம்.



படம் 9


எட்டு வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு மற்றொரு விதமான தையல் கற்றுக் கொடுக்கலாம். இவர்களுக்கு மேற் சொன்ன தையல்களெல்லாம், கற்றுக் கொடுத்த பிறகு, கைக்குட்டைகள் தைக்க கற்பிக்கலாம். கைக்குட்டையின் ஓரங்களை தைப்பதற்கு, முதலில் ஓரங்களை வேண்டிய அளவு மடித்து ஒட்டுத் தையல் (**tacking**) கற்பிக்கலாம். ஒட்டுத்தையல் ஏன் அவசியமென்றால் மடிப்பு நேராகவும், தைப்பதற்கு சுலபமாகவும் இருப்பதற்கே. ஒட்டுத்தையல் முடித்தபிறகு சாய்வு தையல் (**Hemming**) கற்பிக்கவேண்டும். கைக்குட்டை ஓரங்களின்

மடிப்பை வர்ண நூலினால் பலவிதமான அழகுதையல்களும் (Fancy stitches) தைக்கலாம்.



படம் 10

தைக் தட்டைகளுக்கு இழை இழுத்து தைக்க கற்றுக் கொடுக்கலாம். தலையணை உரைக்கு இழை இழுத்து ஓரம் தைத்து, அதன்



படம் 11

மூலைகளில் பலவிதமான (படம் 11) (Design) வரைந்து சங்கலி (chain) தையலால் தைக்கலாம்.

## புத்தக விமர்சனம்

ஸ்ரீமத் பிரம்மாநந்த சுவாமிகளின் ஞானோபதேசம். பிரசுரம் செய்தவர்கள் : ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், மயிலாப்பூர், சென்னை. பக்கங்கள் 202. விலை அணா 14.

"ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்துக்கு முதல் தலைவராயிருக்கும்படி ஸ்ரீமத் விவேகாநந்த சுவாமிகளால் ஸ்ரீமத் பிரம்மாநந்த சுவாமி வேண்டிக் கொள்ளப்பட்டார்." மேற்கூறியதிலிருந்து ஸ்ரீமத் பிரம்மாநந்த சுவாமிகளிடத்தில் ஸ்ரீமத் விவேகாநந்த சுவாமி கொண்டிருந்த பக்தி விளங்கும். இப்படிப்பட்ட ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரின் பிரதம சிஷ்யரின் வாக்கு மிகவும் போற்றத்தக்கது. ஆஸ்திகர்களுக்குத் தகுந்த ஊன்றுகோலாக இப்பிரசுரம் விளங்குகிறது.

---

கல்விக் கதிர். சுவாமி சுத்தானந்த பாரதியார் இயற்றியது. பிரசுரம் செய்தவர்கள் : அன்பு நிலயம், இராமச்சந்திரபுரம், திருச்சி ஜில்லா. 180 பக்கங்கள் கொண்டது. விலை ரூ. 1-8-0

கிரேக்கர், ரோமர் கல்வி முறையிலிருந்து தற்காலத்தில் பிரான்ஸ், ஜெர்மனி, ஜப்பான் முதலிய நாடுகளின் கல்வித்திட்டங்கள்வரை, எல்லாவிதக் கல்வி முறைகளையும் உணர்ச்சி ததும்பும்படி எழுதப்பட்ட நூல். கல்வியில் ஈடுபட்டுள்ள ஒவ்வொருவரும் படிக்கவேண்டிய நூல்களில் இது ஒன்று.

---

# EXTRACTS FROM THE FORT ST. GEORGE GAZETTE (PART I-B.)

## Amendments to the Madras Educational Rules.

*(G. O. Ms. No. 1726, Education, dated 7—11—1941).*

No. 261.

In Appendix 17-A to the Madras Educational Rules.

(i) Item No. 146 under Group II—Castes other than scheduled castes shall be deleted ;

(ii) The following shall be inserted as Note (1), the existing note being renumbered as note (2) :—

"Converts to Christianity or to any other religion from the castes included in Group I above shall be eligible for all fee concessions, including fee remissions in Colleges, for which the scheduled castes ar eligible under the Madras Educational Rules; and

(iii) In the existing note as renumbered for the words "any of the classes above", the following words shall be substituted :—

"any of the castes includes in Group II above."

*(Gazette page 846 of 18—11—41).*

---

*(G. O. Ms. No. 1892, Education, dated 19—11—1941).*

No. 269.

In Appendix 5 to the Madras Educational Rules, for the existing *column (1), the following column* shall be substituted :—

" 1. Name of school ( district) which the pupil is leaving."

*(Gazette page 858 of 25—11—41).*

---

*(G. O. Ms. No. 1921, Education, dated 10—12—41).*

No. 282.

The following shall be added as a sub-paragraph to rule 29 of the Madras Educational Rules :—

"The choice of books for the libraries of schools under local bodies and private management shall be made by the headmaster or headmistress, who will be responsible for the suitability of the books chosen."

*(Gazette page 934 of 16—12—41.)*

## Amendment to the rules relating to the Provident Fund for teachers in non-pensionable service.

*(G. O. Ms. No. 1922, Education, dated 11—12—1941).*

No. 283.

The following amendment to the rules relating to the Provident Fund for teachers in non-pensionable service is published :—

### Amendment

In rule 10, for the words " withdrawals will be permitted on the death or complete retirement of the depositor or on his attaining the age of sixty years," substitute " withdrawals will be permitted on the death or complete retirement of the depositor or on his attaining the age of sixty years or for any other special reasons accepted by the Director of Public Instruction as satisfactory."

*(Gazette page 934 of 16—12—41).*

---

*(G. O. Ms. No. 1951, Education, dated 17—12—1941).*

No. 288.

In rule 77 (ii) of the Madras Educational Rules, in the tables under the heads " In Hindu Schools " and " In Muhammadan Schools " delete the following :—

" Darbar Day ... ... ... ... 1"

*(Gazette page 958 of 23—12—41).*

# செய்தித் திரட்டு

---

## போர்டு எலிமெண்டரி பாடசாலை, போளூர் (வட ஆற்காடு)

10—12—41-ல் பெற்றோர் சங்க ஆண்டுவிழா, ஜில்லா கல்வி அதிகாரி ஸ்ரீ V. K. ராமன் மேனன், M. A. (Oxon.) அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பல பிரமுகர்கள் வந்திருந்தனர்.

தலைவர் ஆங்கிலத்தில் நம் நாட்டுக் கல்வி வளர்ச்சி முறைகளையும், பெற்றோர் சங்கத்தின் நோக்கங்களையும் ஆசிரியர்களின் நிலைமை, கடமை முதலிய விஷயங்களைப்பற்றியும் விரிவாகப் பேசினார். மாணவர்களால் “பிள்ளைகளின் தேர்ச்சிக்குப் பெற்றோர் முக்கிய காரணம்” என்பது பற்றி ஒரு சம்பாஷணை நடத்திக் காட்டப்பட்டது. பிறகு சில பிரமுகர்கள் யுக்த விஷயமாய்ப் பேசினார்கள்.

---

## உயர்தர எலிமெண்டரி பாடசாலை, ஒரத்தூர் (தஞ்சாவூர்)

இப்பாடசாலையின் 15 ஆசிரியர்களும் 50 மாணவர்களும் சேர்ந்து நாகூருக்கு ஓர் உல்லாசப் பிரயாணம் போய்வந்தார்கள். 24—11—41-ல் புறப்பட்டு தஞ்சையில் முக்கிய இடங்களைப் பார்த்துவிட்டு, தஞ்சை கல்வி அதிகாரியின் ஆசியைப்பெற்று, திருவாரூர் போய் அவ்விடத்திலுள்ள விசேஷ இடங்களைப் பார்த்துவிட்டு, சிக்கலில் சிங்கார வடிவேலரைத் தெரிசித்துவிட்டு 25—11—41 இரவு நாகப்பட்டணத்திற்கு நடந்து சென்றார்கள்; 27—11—41-ல் ஊர்திரும்பினார்கள்.

---

## ஆரம்ப ஆசிரியர் சங்கம், திருப்பூண்டி (நாகை தாலூகா)

13—12—41-ல் இச்சங்கத்தின் ஆண்டுவிழா, இவ்வூர் கர்ணம் ஸ்ரீ A. R. சுப்ரமணிய முதலியார் அவர்கள் தலைமையில் கொண்டாடப்பட்டது. அப்பொழுது திருவாரூர் தமிழாசிரியர் வித்வான் ஸ்ரீ. S. தண்டபாணி தேசிகர் அவர்கள் “ஆரம்பக் கல்வியும் ஆசிரியர் கடமையும்” என்பதுபற்றி சொற்பொழிவு செய்தார்.

### ஆரம்ப ஆசிரியர் சங்கம் செய்தங்கநல்லூர், (திருநெல்வேலி)

13—12—41-ல் இச்சங்கக் கூட்டம், ஸ்ரீ வைகுண்டம் சீனியர் டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ மகாலிங்கமய்யர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

தற்போதைய யுத்தமும் யுத்தநிதி உதவியும் பற்றி தலைவர் பேசிய பின் யுத்த நிதிக்கு ஆசிரியரும் பாடசாலைகளும் சிரத்தையுடன் உழைக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

பிறகு, ஆரம்ப வகுப்புகளுக்குத் தாய்பாஷை கற்பித்தல், பெற்றோர் சங்க ஏற்பாடு, பள்ளிகளில் பெண்களின் சேர்க்கை முதலியன பற்றித் தலைவர் விரிவாகப் பேசினார்.

---

### போர்டு உயர்தர பாடசாலை ஹூரூர், (சேலம்)

(a) பெற்றோர் சங்கம்.

7—12—41-ல் இப்பாடசாலை பெற்றோர் சங்கம் கூடிற்று, ஸ்ரீ K. P. கோபால் செட்டியார் தலைமை வகித்தார். தலைமை ஆசிரியர் ஸ்ரீ T. M. முனிசாமி செட்டியார் பெற்றோர்களை வரவேற்றார். 'ஆசிரியரும் பெற்றோர் கடமையும்' என்பதுபற்றி ஸ்ரீ S. P. கோவிந்த செட்டியார் பேசினார். இதையொட்டி மற்றும் சிலர் பேசினார்கள்.

(b) கல்வி, சுகாதார வாரக் கொண்டாட்டம்

8—12—41-ல் ஆரம்பமாயிற்று. தலைமையாசிரியர் ஸ்ரீ T.M. முனிசாமி செட்டியார் அவர்கள் 'பிள்ளைகளும் சுத்தமும்' என்பதுபற்றி சொற்பொழிவு செய்தார். 'இக்கொண்டாட்டத்தின் நோக்கம்' என்பதுபற்றி ஸ்ரீ S. C. சென்னகேசவ முதலியார் பிரசங்கம் செய்தார்.

9—12—41-ல் சுகாதாரப் பாடல்களைப் பாடிக்கொண்டு மாணவர்கள் ஊர்வலம் வந்தார்கள். மாலையில் பந்தய விளையாட்டுகள் நடந்தன. பிள்ளைகளுக்குத் தின்பண்டம் வழங்கப்பட்டது.

14—12—41-ல் ஸ்டேஷனரி ஸப் மாஜிஸ்டிரேட் ஸ்ரீ கொளந்தை செட்டியார் தலைமை வகித்தார். பல அதிகாரிகளும் விஜயம் செய்தனர். பெண்கள் கும்மி கோலாட்டம் முதலியன நிகழ்த்தினர். பின்பு, 'கல்வியின் அவசியம்' என்பதுபற்றி ஆசிரியர் ஸ்ரீ S. P. கோவிந்த செட்டியார் சொற்பொழிவு செய்தார்.

மாலை 7 மணிக்கு ஹெல்த் இன்ஸ்பெக்டர் அவர்களால் **Magic Lantern** காட்டப்பட்டது.

---

### போர்டு ஆண்பாடசாலை, கூமாபட்டி (மதுரை)

19—12—41-ல் இப் பாடசாலைப் பெற்றோர் சங்கம் ஸ்ரீ ஆ. சண்முகம் செட்டியாரவர்கள் தலைமையில் கூடிற்று. அப்பொழுது, ஸ்ரீ முத்துக்கோனாரவர்கள் 'கல்வியின் சிறப்பு' என்பதுபற்றியும், சாரணாசிரியர் ஸ்ரீ J. D. செல்லையாத் தேவர் 'மாணவர், பெற்றோர் கடமை' என்பது பற்றியும், இறுதியில் தலைமையாசிரியர் ஸ்ரீ சீதாராமைய்யர் அவர்கள் 'ஆசிரியர் கடமை' என்பதுபற்றியும் சொற்பொழிவு செய்தார்கள்.

---

### ஆண்பாடசாலை, மோடமங்கலம் (சேலம்)
### சுகாதார வாரக் கொண்டாட்டம்

10—12—41-ல் ஆரம்பமாகி 15—12—41-ல் முடிவுற்றது. தினந்தோறும் மாணவர்கள் சுகாதார கீர்த்தனங்கள் பாடிக்கொண்டு ஊர்வலம் சென்றனர். 12—12—41-ல் தலைமை ஆசிரியர் கொக்கிப் புழு நோயைப்பற்றி விரிவாகப் பேசினார். 15—12—41 காலையில் தண்ணீர்பந்தல்பாளையம் பெண்பாடசாலையில் ஈரோடு ரேஞ்சு ஸப் அசிஸ்டெண்டு இன்ஸ்பெக்டரஸ் தலைமையில் மாதர்கள் கூட்டம் நடைபெற்றது. அன்று மாலை ஹெல்த் இன்ஸ்பெக்டர் தலைமையில் மாபெருங் கூட்டம் நடைபெற்றது. சுகாதார விளையாட்டுகளில் ஜெயித்த மாணவர்களுக்குப் பரிசுகள் அளிக்கப்பட்டன. பிறகு, யுத்தமுறைகளைப்பற்றியும், குஷ்டரோக தொத்துநோயைக் குறித்தும் புகைப்படங்கள் காண்பிக்கப்பட்டன.

---

### பழனி தாலூகா, போர்டு ஆரம்ப ஆசிரிய ஆசிரியைகளின் யூனியன், ஆயக்குடி (மதுரை)

(1) 13—7—41-ல் கூடிய மகாசபை மீட்டிங்கின் நடவடிக்கைகள். ஆஜர் மெம்பர்கள் 89.

13-வது தீர்மானம்:—ஆரம்ப ஆசிரியர்களின் நன்மையைக் கோரி இந்த யூனியனை தென்னிந்திய ஆசிரிய சங்கத்துடன் இணைத்துக்கொள்ள இம் மகாசபை சம்மதிக்கிறது.

(2) 14—12—41-ல் கூடிய நிர்வாகக் கமிட்டியின் நடவடிக்கைகள்.

6-வது தீர்மானம்:—இந்த யூனியனை தென்னிந்திய ஆசிரிய சங்கத்துடன் இணைத்துக்கொள்ளச் சம்மதிக்கிறது.

## போர்டு ஆண்பாடசாலை, அய்யம்பாளையம் (மதுரை) முதியோர் கல்வி ஆரம்ப விழா.

20—12—41-ல் டாக்டர் ஸ்ரீ J. A. ராயப்பா, L.M.P. அவர்கள் தலைமையில் முதியோர் கல்வி வகுப்பு ஆரம்பமாயிற்று. ஏராளமாக கிராம ஜனங்கள் வந்திருந்து விழாவைச் சிறப்பித்தனர். அப்பொழுது, வத்தலகுண்டு தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீ E. S. கோவிந்தன் அவர்கள் 'முதியோர் கல்வி' என்பதுபற்றி ஓர் அரிய சொற்பொழிவு செய்தார். பின்பு, தலைமை ஆசிரியர் ஸ்ரீ V. சுப்பரமணியன் அவர்கள் வந்தனோபசாரம் கூற கூட்டம் இனிது கலைந்தது.

---

## ஸ்காட்லாந்து மிஷின் எலிமெண்டரி பாடசாலை லேடி வில்லிங்டன் சானிடோரியம், திருமணி (செங்கல்பட்டு)

1941-ம் வருஷ கிருஷ்துமஸ் விடுமுறையின் போது நடைபெற்ற சில கொண்டாட்டங்கள்.

20—12—41:—பாடசாலை ஆசிரிய சங்கத்தார் "ஞானம்பாள்". என்ற சிறு சமூக நாடகத்தை வெகு விமரிசையாக நடத்திக் காட்டினர்' தலைமை வகித்த சானிடோரியம் சூபரின்டெண்டு Rev. V. W. Coombes அவர்கள் ஆசிரியர்களின் நடிப்புத் திறமையைப் பற்றியும், கதையின் கருத்தைப் பற்றியும் விரித்துரைத்தார். ஆசிரியர் ஸ்ரீ. S. K. பத்மநாபன் வந்தனோபசாரம் கூறினர்.

22—12—41 பாடசாலையைச் சேர்ந்த முதல் திருமணி ஹிந்துஸ்தான் சாரண சங்கத்தாரால், தலைமை ஆசிரியர் Mr. G. V. Job, M.A., L.T., அவர்கள் தலைமையில், 'V' Scout Rally நடைபெற்றது பல சிறந்த நிகழ்ச்சிகள் சாரணச் சிறுவர்களாலும், குருளையர்கள் என்ற சிங்கக் குட்டிகளாலும் உற்சாகத்துடன் நடித்துக் காட்டப்பட்டது. தலைவர் அவர்களும் உதவி கமிஷனர் அவர்களும் தாங்கள் கண்ணுற்ற நிகழ்ச்சிகளைப் பற்றியும், பிள்ளைகளைப் பற்றியும் பாராட்டிப் பேசினர்கள். ஆசிரியர் ஸ்ரீ K. V. சுப்பாராவ் வந்தனம் கூறினர்.

23—12—41 பாடசாலைச் சிறுவர்கள் ஒரு கதம்பக் கச்சேரி (Variety concert) நடத்தினர்கள். சானிடோரியம் பிரதம மெடிகல் ஆபீஸர் Dr. R. G. Cochrane அவர்கள் தலைமை வகித்தார். பிள்ளைகளின் தேர்ச்சியையும் ஊக்கத்தையும் பாராட்டிப் பேசினர். ஆசிரியர் ஸ்ரீ S. Gopal, வந்தனோபசாரம் கூறினர்.

27—12—41 பாடசாலை சிறுவர்களுக்கான பந்தய விளையாட்டுகள் (Annual sports) நடைபெற்றன.

## உபாத்திமைச் சங்கம், ராசிபுரம் (சேலம்)

20—12—41-ல் ஜில்லா கல்வியதிகாரி ஸ்ரீ V. நடராஜன் அவர்கள் தலைமையில் இச்சங்க ஆண்டுவிழா நடைபெற்றது. மாணவ மாணவிகள் கும்மி கோலாட்டம் முதலியன நடத்தினார்கள். தமிழ் பண்டிதர் ஸ்ரீ A. பொன்னுசாமி பிள்ளையவர்கள் 'குகனும் பரதனும்' என்பது பற்றிப் பேசினார். தலைவர், பாடசாலைகளில் பெண் குழந்தைகளையும், ஷெடியூல் வகுப்புப் பிள்ளைகளையும் அதிகமாகச் சேர்க்க வேண்டு மென்றும் நவீன முறையில் பாடங்கள் போதிக்கப் பட வேண்டு மென்றும் கூறினார். ஸ்ரீ A. ராமசாமி அய்யர் வந்தனோபசாரம் கூறினார்.

---

## அம்பாசமுத்திரம் தாலூகா சகாய ஆரம்ப ஆசிரியர் யூனியன், சேர்மாதேவி

27—12—41-ல் இந்த யூனியனின் அரை வருஷக்கூட்டம் கல்லிடைக்குறிச்சி சரஸ்வதி பாடசாலையில் யூனியன் தலைவர் ஸ்ரீ A. சுந்தரம் பிள்ளையவர்கள் தலைமையில் நடைபெற்றது. அப்பொழுது, பாடசாலை நாட்களைக் குறைக்க வேண்டுமென்றும், புது பஞ்சாயத்து சட்டத்தில் ஆரம்ப ஆசிரியர்கள் ஒவ்வொரு பஞ்சாயத்திலும் ஸ்தானம் வகிக்கும்படி ஒரு செக்ஷன் சேர்க்க வேண்டுமென்றும், சர்டிபிகேட்டும் போதனா முறைப் பயிற்சியும் அற்ற, 12—1—1932-ல் விலக்கு பெற்ற ஆசிரியர்கள் தங்கள் 60-வது வயதுவரை வேலைபார்க்க அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் யுத்தப்படி ஒவ்வொரு ஆசிரியருக்கும் குறைந்தது மாதம் ரூ. 2 வீதம் கொடுக்கவேண்டும் என்றும், E.S.L.C. பரீட்சை தினம் ஒரு பாடம் வீதம் நடத்தப்பட வேண்டுமென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தலைவர் அங்கத்தினர்களுக்குச் சிற்றுண்டியளித்தார்.

---

## டவுன் ஆரம்ப ஆசிரியர் சங்கம், தஞ்சாவூர்

3—1—42ல் இச்சங்கத்தின் மாதாந்திரக் கூட்டம் டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ T. V. வெங்கட்டராம அய்யர், B. A., L. T., அவர்கள் தலைமையில் கூடிற்று. 1942 வருஷ அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டனர். தலைவர் அவர்களால் ஏழு சுற்றறிக்கைகள் வாசித்து விளக்கப் பட்டன. பிறகு தலைவர் 'தாய்மொழி' என்பது பற்றி மிகவும் விரிவாக சொற்பொழிவு செய்தார். காரியதரிசி ஸ்ரீ T. S. மாருதிராவ் தலைவருக்கு நன்றி கூற கூட்டம் இனிது கலைந்தது.

---

# பத்திராதிபர் குறிப்பு

## வித்தியாசமேன் ?

சமீப காலத்தில் நடந்து வரும் ஒவ்வொரு ஆரம்ப ஆசிரியர் சங்கக் கூட்டத்திலும், சாமான்களின் விலை ஏற்றம் அதிகமாகிக் கொண்டே வருவதால், ஆரம்ப ஆசிரியர்களுக்கு இதை முன்னிட்டு யுத்தப்படி (Dearness allowance) கொடுக்கு மாறு கேட்டுக் கொள்ளும் தீர் மானங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. விலை ஏறி இருக்கின்றன என் பது உண்மையே. அதனால் குறைந்த சம்பளம் பெருவோர்களுக்கு உதவி யும் தேவை என்பதும் எல்லோரும் ஒப்புக்கொள்ளக்கூடியதுதான். ஆயினும் சில ஸ்தல ஸ்தாபனங்களில் ஆசிரியர்கள் தவிற மற்ற எல்லா சிப்பந்திகளுக்கும் டியர்னஸ் அலவன்ஸ் கொடுத்துதவி வருகிறார்களாம். ஆனால் ஆசிரியர்களுக்கு இந்த உபகாரம் இல்லை என்று சொல்லப்படுகிற தாம். ஏன் இந்த வித்தியாசம் ? சம்பளத்தைக் கவனித்துப் பார்த்தால் மற்ற இலாகாவில் இருப்பவர்களைக் காட்டிலும் ஆசிரியர்களின் சம்ப ளமே குறைவு. ஆசிரியர்கள் என்றால் கடைகளில் ஏதாவது சலுகை காட்டுகிறார்களா ? மற்ற இலாகாவிலுள்ளவர்களுக்கு சாமான்கள் கடனுக்குக்கூடக் கிடைக்கும். ஆசிரியர்களுக்கு முன்பணம் கொடுத் தால் தான் சாமான்கள் விற்கப்படுகின்றன. இப்படியிருக்க, ஆசிரியர்களின் எண்ணிக்கை அதிகம். அதனால் நபர் 1-க்கு ரூபாய் 1 கொடுத்தால் மாதம் ரூ. 1000-க்கு மேல் வேண்டியிருக்குமே, என்று கணக்கிட்டு, இவர்களுக்கு டியர்னஸ் அலவன்ஸ் இல்லை என்று சொல்வது அநீதியாகும். இம்மாதிரி வித்தியாசம் பாராட்டாமல் ஆசிரி யர்களுக்கும் டியர்னஸ் அலவென்ஸ் கொடுத்து உதவவேண்டும் என்பதை வற்புறுத்துகிறோம்.

## திருச்சி ஜில்லா ஆசிரியர் சங்கப் பதிப்பு

★ ஆரம்ப ஆசிரியர் பாடதிட்ட மொழி பெயர்ப்பும் விமர்சனமும்

★ ஆரம்பக் கல்வி விதி விளக்கம்

★ உபாத்தியாயர்கள் கைப்புத்தகம்
(200 பக்கங்கள் அடங்கியது)

விலை ரூ. **0—8—0.** (தபால் செலவு பிரத்தியேகம்)

: வேண்டுபவர்கள் :

**ஸ்ரீ S. T. ராமானுஜ அய்யங்கார்**
ஸ்வாமிநாத பவன் :: ஸ்ரீரங்கம்

: என்ற விலாஸத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும் :

மாணவர்களே! வாலிபர்களே!!

உங்களுக்கென சமைத்து வைத்துள்ள

## சுவாமி விவேகாநந்தர்

## ஞான அமிழ்தத்தை உண்ணுங்கள்.

★

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீ விவேகாநந்த | சரித்திரம் | விலை | 0—12—0 |
| ,, ,, | கடிதங்கள் | ,, | 0—10—0 |
| ,, ,, | நமது தாய் நாடு | ,, | 0— 8—0 |
| ,, ,, | சுவாமிகள் | ,, | 0— 3—0 |
| ,, ,, | எனது குருநாதர் | ,, | 0— 3—0 |

★

விரிவான ஜாபிதாவுக்கு எழுதுக

**ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்,** மயிலாப்பூர், சென்னை.

# பொருளடக்கம்


பக்கம்

1. தாய் மொழி கற்பித்தல் ... .... .... 357
—M. சுப்பிரமணியம்

2. கலையும் கைத்தொழிலும்—IX .... .... 363
—R. M. Savur

3. பிள்ளைகளின் கையெழுத்து—II .... .... 365
—R. மஹாதேவன் B.A., L.T.

4. தேகாப்பியாசவிளையாட்டுகளைப் பற்றிய விளக்கம் .... 366
—T. S. முத்துசாமி

5. பை தைத்தல் .... .... .... .... 371
—ஸ்ரீமதி ஸீ. காந்தா

6. செய்தித் திரட்டு .... .... .... 374

7. பத்திராதிபர் குறிப்பு ... .. .... 380


## சந்தாதார்களுக்கு அறிக்கை

சந்தாதார்களுக்கு ஞாபகப் படுத்தும் பொருட்டு பாலர் கல்வியின் சந்தா எந்த மாதத்துடன் முடிவடைகிறதோ அந்த மாதப் பத்திரிகையில் அச்சந்தா நம்பர்களைப் பிரசுரிக்கிறோம். சந்தாதார்கள் அதை முக்கியமாகக் கவனித்து சந்தா தொகையைத் தவக்கமில்லாமல் முன்பணமாக அனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். தற்சமயம் அசௌகரியமாயிருந்தால் சந்தா அனுப்பும் தேதியைக் குறித்து உடனே ஒரு கார்டு எழுதியனுப்பவும். தவறினால் வி. பி. அனுப்பி சந்தாவை வசூலிக்க நேரிடும்.

தவிர ஒவ்வொரு மாதமும் சஞ்சிகை 25உக்குள் கிடைக்காவிட்டால் உடனே தெரிவிக்கவேண்டும். அதற்குப் பிறகு வரும் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

1942 பிப்ரவரி மாதத்துடன் முடிவடையும் சந்தா நம்பர்கள் :—

செங்கல்பட்டு—Ch. 6
வட ஆற்காடு—N. A. 16, 21, 46, 55.
தென்னாற்காடு—S. A. 17.
தஞ்சாவூர்—Tan. 58, 65, 89.
திருச்சி—Tri. 26.
ராமனாதபுரம்—Rd. 11.
மதுரை—Md. 10, 22.
திருநெல்வேலி—Tin. 4, 10, 11, 64.
சேலம்—S. 4, 53, 54.
கோயமுத்தூர்—Co. 11, 58.
திருவாங்கூர்—Tra. 4.

குறிப்பு :—சந்தா நம்பர்கள் விலாசத்துடன் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆபீஸுக்கு அனுப்பும் ஒவ்வொரு கடிதத்திலும், மணியார்டர் கூபன்களிலும் சந்தா நம்பரைக் கட்டாயம் குறிப்பிடவும்.

—பத்திராதிபர்